# ஏப்ரல்- 07 – சனி

## ஆண்டவரே என் ஆற்றல: என் பாடல், என் மீட்பும் அவரே. திபா. 118:14

## முதல் வாசகம் : திருத்தூதர் பணிகள் 4 : 13 – 21

அக்காலத்தில் பேதுருவும் யோவானும் கல்வியறிவற்றவர்கள் என்பதைத் தலைமைச் சங்கத்தார் அறிந்திருந்ததால், அவர்களது துணிவைக் கண்டு வியப்படைந்தனர் அவர்கள் இயேசுவோடு இருந்தவர்கள் என்பதையும் உணர்ந்து கொண்டனர். நலம் பெற்ற மனிதர் அவர்களோடு நிற்பதைக் கண்டதால் அவர்களால் ஒன்றும் மறுத்துப் பேச முடியவில்லை. எனவே அவர்கள் பேதுருவையும் யோவானையும் சங்கத்தைவிட்டு வெளியேறும்படி ஆணையிட்டு, பின்பு தங்களுக்குள் இது குறித்துக் கலந்து பேசினார்கள். ”நாம் இந்த மனிதர்களை என்ன செய்யலாம்? ஏனென்றால் குறிப்பிடத்தக்க ஓர் அரும் அடையாளத்தை இவர்கள் செய்துள்ளார்கள் இது எருசலேமில் வாழும் அனைவருக்கும் தெரியும். இதை நாம் மறுக்க முடியாது. ஆகவே இச்செய்தி மேலும் மக்களிடையே பரவாமலிருக்குமாறு இந்த இயேசுவைக் குறித்து யாரிடமும் பேசக் கூடாதென நாம் இவர்களை அச்சுறுத்தி வைப்போம்” என்று கூறினார்கள். அதன் பின்பு தலைமைச் சங்கத்தார் அவர்களை அழைத்து, ”இயேசுவைப் பற்றி எதுவும் பேசவோ, கற்பிக்கவோ கூடாது” என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டனர். அதற்குப் பேதுருவும் யோவானும் மறுமொழியாக, ”உங்களுக்குச் செவிசாய்ப்பதா? கடவுளுக்குச் செவிசாய்ப்பதா? இதில் கடவுள் பார்வையில் எது முறையானது என நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள் என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது” என்றனர். அவர்களைத் தண்டிப்பதற்கு வேறு வழி கண்டுபிடிக்க முடியாததாலும், மக்களுக்கு அஞ்சியதாலும் தலைமைச் சங்கத்தார் அவர்களை மீண்டும் அச்சுறுத்தி விடுதலை செய்தனர். ஏனென்றால் நடந்ததைக் குறித்து மக்கள் அனைவரும் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே என் மண்றாட்டை நீர் கேட்டதனால்
நான் நன்றி செலுத்துகிறேன்.

## நற்செய்தி : மாற்கு16 : 9 - 15

வாரத்தின் முதல் நாள் காலையில் இயேசு உயிர்த்தெழுந்த பின்பு அவர் முதலில் மகதலா மரியாவுக்குத் தோன்றினார். அவரிடமிருந்துதான் அவர் ஏழு பேய்களை ஓட்டியிருந்தார். மரியா புறப்பட்டுச் சென்று இயேசுவோடு இருந்தவர்களிடம் இதை அறிவித்தார். அவர்கள் துயருற்று அழுதுகொண்டிருந்தார்கள். அவர் உயிரோடு இருக்கிறார் என்றும் மரியா அவரைக் கண்டார் என்றும் கேட்டபோது அவர்கள் நம்பவில்லை. அதன்பிறகு அவர்களுள் இருவர் வயல்வெளிக்கு நடந்து சென்றபோது இயேசு அவர்களுக்கு வேற்று உருவில் தோன்றினார். அவர்கள் சென்று அதனை மற்றவர்களுக்கு அறிவித்தார்கள் அவர்கள் சொன்னதையும் சீடர்கள் நம்பவில்லை. இறுதியாகப் பதினொருவரும் பந்தியில் அமர்ந்திருந்தபொழுது அவர்களுக்கு இயேசு தோன்றினார். உயிருடன் எழுப்பப்பட்ட தம்மைக் கண்டவர்கள் சொன்னதை நம்பாமல் அவர்கள் கடின உள்ளத்தோடு இருந்தமையால் அவர் அவர்களுடைய நம்பிக்கையின்மையைக் கண்டித்தார். இயேசு அவர்களை நோக்கி, ”உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்” என்றார்.

**தியானம் :** இன்றைய நற்செய்தியில் மகதலா மரியா அதிகாலையில் ஆண்டவரைத் தேடி கல்லறைக்கு சென்றார். ஏழு பேய் பிடித்தவர் என்று சமுதாயம் ஒதுக்கி வைத்திருந்தாலும் ஆண்டவர் தமது வல்லமையால் அவரை தீயசக்தியிலுருந்து முற்றாக விடுதலை கொடுத்தார். விடுதலை அடைந்த அவர் ஆண்டவர் தனக்கு செய்த நன்மையை மறவாமல் இயேசு அடக்கம் செய்யப்பட்ட கல்லறையை அதிகாலையில் தேடி சென்றார். உயிர்த்த இயேசு சீடர்களுக்கு முதலில் காட்சி கொடுக்கவில்லை. தன்னை ஆவலுடன் அதிகாலையில் தேடி வந்த மகதலா மரியாவுக்கு தான் தோன்றினார். மரியா புறப்பட்டுச் சென்று இயேசுவோடு இருந்தவர்களிடம் இதை அறிவித்தார். இந்த நற்செய்தியை இயேசு எம்மிடமும் எதிர்பார்க்கிறார் .இன்றைய காலத்தில் நாம் எதற்காக ஓடுகிறோம்? இறை அருளுக்கா அல்லது உலக நாட்டத்திற்கா? எமது தேடல் ஆண்டவருக்குள் இருக்கின்றதா? எமக்கு நோய், துன்பம், வேதனை ,சோர்வு நேரங்களில் ஆண்டவரை நாம் ஆர்வமுடன் தேடும் போது தம்மை நமக்கு திருப்பலி, நற்கருணை, இறைவார்த்தையூடாக வெளிப்படுத்துவார். இந்த இறைஉணர்வு, உறவு எமக்குபல மடங்கான ஆசீர்வாதங்களை எமக்கு தரும். எமக்கு கிடைக்கும் நன்மை ஆசீர்வாதங்களை எமக்குள் மட்டும் வைத்துக் கொள்ளாமல் பிறருடன் பகிர ஆண்டவர் இன்று அன்புடன் அழைக்கின்றார். இதனால் இறை அருள் பெற்று அவரது அன்புச்சீடராவோம்.